**தேதி :** 10.03.2026 **SC.No. :** 443/2016 PW :8 Dr.சண்முகையா

**(எதிரிகள் ஆஜரில்லை. கு.வி.மு.ச.317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.)**

**முதல் விசாரணை தொடர்ச்சி –**

வலது பெருவிரலில் சிராய்ப்பு காயம் இருந்தது. மருதையாபாண்டியனை திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். அவருக்கு கண்ணுக்கு கீழ் உள்ள எலும்பு உடைந்திருந்தது. கண்ணிற்கு உள்பக்கமுள்ள எலும்பும் உடைந்திருந்தது. அவர் 22.02.2013 அன்று விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட (2), (3) காயங்கள் கொடுங்காயங்கள் என சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.4** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் சிகிச்சை குறிப்புகள் அவருக்கு திருநெல்வேலி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்ட சிகிச்சை குறிப்புகள் தான். அது **நீ.ம.சா.ஆ.3** ஆகும்.

(சிகிச்சை குறிப்புகள் கடையநல்லூர் அரசு மருத்துவமனை ஆவணக்காப்பாளரான நீ.சா.1 ஐயப்பன் என்பவர் ஆஜர்படுத்தினார்.)

அதே நாள் இரவு 10.25 மணிக்கு இராஜேந்திரன் என்ற 38 வயது மதிக்கத்தக்க ஒரு நபர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவர் தன்னை 15.02.2013 அன்று தெரிந்த 6 நபர்கள் சுந்தரேசபுரத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து இரும்பு கம்பி மற்றும் கம்பு வைத்து தாக்கப்பட்டதாக கூறினார். அவர் சுயநினைவுடன் காணப்பட்டார். அவரை நான் பரிசோதனை செய்தபோது அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

(1). வலது முழங்கையில் சிராய்ப்பு காயம் இருந்தது.

(2). பின் தலையின் V வடிவத்தில் 3 x 1 cm அளவில் வெட்டுக்காயம் இருந்தது.

(3).இடது பக்க தலையிலும் ஒரு வெட்டுக்காயம் இருந்தது.

அவரை மேல்சிகிச்சைக்கு திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன். அவர் 22.02.2013 அன்று சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார். அவருக்கு எலும்பு முறிவு காயங்கள் எதுவுமில்லை. திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற சிகிச்சை குறிப்புகளின் படி அவருடைய காயம் சாதாரண காயம் என நான் சான்று வழங்கினேன். அந்த காயச்சான்று **அ.சா.ஆ.5** ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் சிகிச்சை குறிப்புகள் திருநெல்வேலி மருத்துவக்கல்லூரி மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்டது தான். அது **நீ.ம.சா.ஆ.4** ஆகும்.

(சிகிச்சை குறிப்புகள் கடையநல்லூர் அரசு மருத்துவமனை ஆவணக்காப்பாளரான நீ.சா.1 ஐயப்பன் என்பவர் ஆஜர்படுத்தினார்.)

காயம்பட்டவர்கள் சொன்ன நேரத்தில், சொன்ன விதத்தில், சொன்ன ஆயுதத்தினால் அந்த காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

ஆய்வாளர் என்னை விசாரித்தபோது, மருதையா பாண்டியன், இராஜேந்திரன் ஆகியோர்கள் என்ன ஆயுதத்தினால் தாக்கப்பட்டார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரியல்ல. முன்னால் நிற்கும் ஒரு நபரைத் தாக்கும் போது அந்த நபரின் தலையின் பின்புறம் காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரிதான். ஒருவர் வேகமாக ஓடி மல்லாக்க

விழும்போது தலையின் பின்புறம் கல்லில் பட்டால் வெட்டுக்காயம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். இரும்புக்கம்பியால் தாக்கப்படும்போது வெட்டுக்காயம் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரிதான். இரும்புக்கம்பியை காண்பித்து ஆய்வாளர் என்னிடம் கருத்துரு பெறவில்லை என்றால் சரிதான்.

கம்பியால் தாக்கப்படும் போது V வடித்திலுள்ள காயங்கள் ஏற்பட வாய்ப்பில்லை என்றால் சரிதான். ஒரு நபரை 6க்கும் மேற்பட்ட நபர்கள் கம்பு, கம்பி, கல் ஆகிய ஆயுதங்களினால் தாக்கப்பட்டால் நிறைய காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். ஒருவர் வீட்டிற்குள் வேகமாகச் செல்லும்போது, கதவின் நிலை தட்டினால் இராஜேந்திரனுக்கு தலையில் ஏற்பட்ட காயம் மாதிரி ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மருதையாபாண்டியனுக்கு இருந்த முதலாவது காயம் கன்றிய காயம் என்றால் சரிதான்.

அதே தினத்தில் இரவு 11.00 மணிக்கு இசக்கிபாண்டியன் என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார் என்றால் சரிதான். அவர் தன்னை 2 நபர்கள் தாக்கியதாக கூறினார். அவருக்கு தலையின் உச்சியில் 4 inch நீளமும், 1 cm ஆழமும் உள்ள நீளமான வெட்டுக்காயம் இருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை செய்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சிறுகாயங்கள் ஆகும்.

அதே தினம், இரவு 11.10 மணியளவில் சுப்பையாபாண்டியன் என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவருக்கு இடது காலில் 3 inch நீளமும்,

1 cm ஆழத்தில் அரை வட்டத்தில் ஒருவெட்டுக்காயம் இருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை செய்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சிறுகாயங்கள் ஆகும்.

அதே தினம், இரவு 11.20 மணியளவில் குமார் என்பவர் என்னிடம் சிகிச்சைக்கு வந்தார். அவருக்கு வலது முன்கையில் 1 cm நீளத்தில் ஒரு சிறுகாயம் இருந்தது. அவருக்கு முதலுதவி சிகிச்சை செய்து தென்காசி அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிச்சைக்காக அனுப்பி வைத்தேன். அவருக்கு ஏற்பட்ட காயங்கள் சிறுகாயங்கள் ஆகும்.

இசக்கிபாண்டியன், சுப்பையாபாண்டியன், குமார், ஆகியோர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் அரிவாளால் தாக்கப்படும் போது அவர்கள் சொன்ன நேரத்தில் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

<u>மறுவிசாரணை</u> –

இல்லை.

சாட்சி கடையநல்லூர், மகாராஜா மருத்துவமனை காணொளி அறையில் இருந்து காணொளி மூலம் ஆஜரானார். அவரது வாக்குமூலம் Thiru. Sabapathy, Ward Manager கடையநல்லூர், மகாராஜா மருத்துவமனை என்பவர் முன்னிலையில் ஒருங்கிணைக்கப்பட்டு, இந்த திறந்த நீதிமன்றத்தில் பெஞ்ச் கிளார்க் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்பட்டது.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.03.11 11:34:34 +0530